சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

**Case No. OS.4/2023**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | தொழில் | கிளை உதவி மேலாளர்,<br>கனரா வங்கி, ஆரணி கிளை. |
| தந்தை பெயர் | சுப்பிரமணியன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | திருவண்ணாமலை | வயது | 33 |

**23.02.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி வங்கியில் கிளை உதவி மேலாளராக பணி புரிகிறேன். என் பணியாளர் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். எனது பணியாளர் அடையாள அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 17.04.2007 தேதியிட்ட கடன் விண்ணப்பம் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.04.2007 தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்தம் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.06.2012 தேதியிட்ட கடன் புதுப்பித்தல் கடிதம் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.10.2014 தேதியிட்ட கடன் புதுப்பித்தல் கடிதம் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.10.2017 தேதியிட்ட கடன் புதுப்பித்தல் கடிதம் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.09.2020 தேதியிட்ட கடன் புதுப்பித்தல் கடிதம் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடன் கணக்கு அறிக்கை **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அளிக்கப்பட்ட அங்கீகார கடிதம் மற்றும் எனது பணியாளர் அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாவில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.